# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 23 | 4 Pages | 24.08.2023 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 23 | 4 பக்கங்கள் | 24.08.2023 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## உலகின் வளர்ச்சி எந்திரமாக இந்தியா உருவெடுக்கும்: பிரதமர் மோடி பேச்சு

ஜோகனஸ்பர்க், ஆக. 24

தென்ஆப்பிரிக்காவின் ஜோகனஸ்பர்க்கில் 15வது பிரிக்ஸ் உச்சி மாநாடு இன்று வரை நடக்கிறது. அந்நாட்டு அதிபர் சிரில் ரமபோசாவின் அழைப்பின் பேரில் 15வது பிரிக்ஸ் மாநாட்டில் பிரதமர் மோடி கலந்து கொள்கிறார். இதில் பங்கேற்க பிரதமர் நரேந்திர மோடி இன்று தென்ஆப்பிரிக்கா சென்றடைந்தார். ஜோகனஸ்பர்க் நகரில் பிரதமர் மோடிக்கு அந்நாட்டு வாழ் இந்தியர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். இந்நிலையில், பிரிக்ஸ் அமைப்புகளின் வர்த்தக அமைப்பு ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பேசியதாவது: உலக பொருளாதாரத்தில் இந்தியா வேகமாக வளர்ச்சி கண்டு வருகிறது. உலக வளர்ச்சிக்கான இன்ஜினாக இந்தியா விளங்கும். இந்தியாவில் ஜி.எஸ்.டி. அமலுக்கு வந்த பிறகு முதலீட்டாளர்களின் நம்பிக்கை அதிகரித்துள்ளது. யு.பி.ஐ. தொழில்நுட்பம் இன்று தெருவோர வியாபாரிகளால் பயன்படுத்தப்படுகிறது. சூரிய ஆற்றல், காற்றாலை ஆற்றல், மின்சார வாகனங்கள் உள்ளிட்ட துறைகளில் இந்தியாவை உற்பத்தி மையமாக மாற்ற நாங்கள் தீவிரமாக நடவடிக்கை எடுத்து வருகிறோம் என தெரிவித்தார்.

## 1200 அடி உயரத்தில் ஊசலாடிய கேபிள் கார்: 14 மணி நேரத்துக்கு பின் குழந்தைகள் உள்பட 8 பேரும் மீட்பு



இஸ்லாமாபாத், ஆக. 24

பாகிஸ்தானின் வடமேற்கில் உள்ளது கைபர் பக்துன்வா பிராந்தியம். இது கரடுமுரடான மலைகளும், ஆழமான பள்ளத்தாக்குகளும், நதிகளும், சமநிலைகளும் நிறைந்த ஒரு பிரதேசம் ஆகும். இங்குள்ள பள்ளத்தாக்குகளைக் கடக்க பாலங்கள் அமைக்க முடியாததால், மக்கள் ஒரு மலையிலிருந்து எதிரே உள்ள மலைக்கு அந்தரத்தில் கேபிள் கார் எனப்படும் ஒரு கயிறின் மூலமாக இயக்கப்படும் சிறு வாகனத்தில் அமர்ந்து பயணம் செய்கின்றனர். குழந்தைகள் பள்ளிக்குச் செல்ல கேபிள் கார் மூலமாக ஒரு மலைப்பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்குச் செல்வது வழக்கம். அந்த வகையில், நேற்று காலை 7 மணியளவில் 6 குழந்தைகள், 2 பெரியவர்கள் என மொத்தம் 8 பேர் ஒரு கேபிள் காரில் பயணம் செய்தனர். தரையில் இருந்து சுமார் 1,200 அடிக்கு மேலே அது செல்லும்போது கயிறு திடீரென அறுந்தது. இதனால் அந்த கேபிள் கார் பயணிகளுடன் அந்தரத்தில் ஊசலாட தொடங்கியது. இந்நிலையில், 14 மணி நேரத்துக்குப் பிறகு குழந்தைகள் உள்பட 8 பேரும் மீட்புக் குழுவினரால் பத்திரமாக மீட்கப்பட்டனர் என தற்காலிக பிரதமர் அன்வர் உல் ஹக் ககர் தெரிவித்துள்ளார்.

## ஜி20 மாநாட்டில் பங்கேற்க அதிபர் ஜோ பைடன் செப். 7ல் இந்தியா வருகை: வெள்ளை மாளிகை அறிவிப்பு



வாஷிங்டன், ஆக. 24

ஜி 20 அமைப்புக்கு இந்த ஆண்டு இந்தியா தலைமை வகிக்கிறது. அந்த அமைப்பின் உச்சி மாநாடு டெல்லியில் செப்டம்பர் 9 மற்றும் 10ம் தேதிகளில் நடக்கிறது. ஜி 20 நாடுகளின் மாநாடு டெல்லி பிரகதி மைதானத்தில் நடைபெற உள்ளது. இந்நிலையில், ஜி20 மாநாட்டில் பங்கேற்பதற்காக அமெரிக்க அதிபர் ஜோ பைடன் செப்டம்பர் 7ம் தேதி இந்தியா வரவுள்ளார் என வெள்ளை மாளிகை தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜாக் சுல்லிவன் தெரிவித்துள்ளார். மேலும், அதிபர் பைடன் மற்றும் ஜி 20 தலைவர்கள் உலகளாவிய பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கான கூட்டு முயற்சிகள் பற்றி விவாதிப்பார்கள். சுத்தமான எரிசக்தி மாற்றம் மற்றும் கால நிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடுவது உள்பட பல்வேறு விஷயங்கள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது என தெரிவித்தார். ஜோபைடன் அமெரிக்க அதிபராக பதவியேற்ற பிறகு முதல் முறையாக இந்தியா வர உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தேர்தல் மோசடி வழக்கு: டிரம்ப் இன்று கோர்ட்டில் சரண்

அமெரிக்கா, ஆக. 24

வழக்கு தொடர்பாக கோர்ட்டில் ஆஜராகுமாறு டிரம்புக்கு உத்தரவிடப்பட்டது. டிரம்ப் கோர்ட்டில் ஆஜராகுவதையடுத்து ஜார்ஜியாவில் பலத்த பாதுகாப்பு போடப்படும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. அமெரிக்க முன்னாள் அதிபர் டொனால்டு டிரம்ப் மீது தேர்தல் மோசடி வழக்கு தொடரப்பட்டது. கடந்த 2020ம் ஆண்டு நடந்த அதிபர் தேர்தல் முடிவுகளை மாற்றியதாக டிரம்ப் மற்றும் 18 பேர் மீது ஜார்ஜியா கோர்ட்டில் குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடந்து வருகிறது. இந்த வழக்கு தொடர்பாக கோர்ட்டில் ஆஜராகுமாறு டிரம்புக்கு உத்தரவிடப்பட்டது. அவருக்கு 25ந்தேதி வரை அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் தேர்தல் மோசடி வழக்கு தொடர்பாக ஜார்ஜியா கோர்ட்டில் வருகிற 24ந்தேதி டிரம்ப் சரண் அடைகிறார். இது தொடர்பாக டிரம்ப் தனது சமூக ஊடக பக்கத்தில் கூறும்போது, உங்களால் நம்ப முடிகிறதா? கைது செய்யப்படுவதற்காக நான் வியாழன் அன்று ஜார்ஜியாவின் அட்லாண்டாவுக்கு செல்கிறேன் என்று தெரிவித்துள்ளார். டிரம்ப் கோர்ட்டில் ஆஜராகுவதையடுத்து ஜார்ஜியாவில் பலத்த பாதுகாப்பு போடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே டிரம்ப் மீது ஆபாச நடிகைக்கு பணம் கொடுத்தது, அரசின் ரகசிய ஆவணங்களை வீட்டில் பதுக்கியது உள்ளிட்ட வழக்கு விசாரணை நடந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## முதல் முயற்சி தோல்வி: ராணுவ உளவு செயற்கைக்கோளை மீண்டும் ஏவ வடகொரியா திட்டம்

வடகொரியா, ஆக. 24

அமெரிக்காதென் கொரியா நாடுகள் இணைந்து போர்ப் பயிற்சியில் ஈடுபடுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து வடகொரியா அடிக்கடி ஏவுகணை சோதனை நடத்தி வருகிறது. இதற்கிடையே கடந்த மே மாதம் ராணுவ உளவு செயற்கைக்கோளை வடகொரியா விண்ணில் ஏவியது. ஆனால் ராக்கெட் கடலில் விழுந்து தோல்வியில் முடிந்தது. முதல் ஏவுதலில் என்ன தவறு ஏற்பட்டது என்பது குறித்து ஆய்வு செய்யப்படும் என்று வட கொரியா தெரிவித்தது. இந்நிலையில் உளவு செயற்கை கோளை மீண்டும் விண்ணில் ஏவ வடகொரியா திட்டமிட்டு உள்ளது. இது தொடர்பாக ஜப்பான் அதிகாரிகள் கூறும்போது, வடகொரியா வரும் நாட்களில் உளவு செயற்கைகோளை ஏவ திட்டமிட்டுள்ளது என்றனர். வருகிற 24ந்தேதி முதல் 30ந்தேதிக்குள் செயற்கைக் கோளை விண்ணில் செலுத்தும் திட்டம் குறித்து வடகொரியா அதிகாரிகள் தெரிவித்ததாக ஜப்பான் கடலோர காவல் படை கூறியுள்ளது. அதே வேளையில் வடகொரியா எந்த வகையான செயற்கைக் கோளை ஏவ உள்ளது என்பது குறித்து தெரிவிக்கவில்லை என்று கடலோர காவல் படை செய்தி தொடர்பாளர் ஹிரோ முனே கிகுச்சி தெரிவித்தார். ஆனால் அந்த செயற்கைக்கோள் கடந்த மே மாதம் ஏவப்பட்ட உளவு செயற்கைக் கோளை போலவே இருக்கலாம் என்று நம்புகிறேன் என்றார்.

# இமாச்சல பிரதேசத்திற்கு தமிழக அரசு சார்பில் ரூ.10 கோடி நிதியுதவி: முதல்வர் அறிவிப்பு

சென்னை, ஆக. 24

இமாச்சல பிரதேசத்தில் தொடர் கனமழை காரணமாக 100க்கும் மேற்பட்டோர் பலியாகினர். தமிழக அரசு சார்பில் இமாச்சலுக்கு ரூ.10 கோடி நிதியுதவி அளிக்கப்படும் என முதல்வர் தெரிவித்தார்.



இமாச்சலப் பிரதேசத்தில் சமீப காலமாக ஏற்பட்ட கனமழை, வெள்ளம்மற்றும்நிலச்சரிவுகளால் பேரழிவைச் சந்தித்தது. மழை மற்றும் நிலச்சரிவு காரணமாக இது வரை ஆயிரக்கணக்கான வீடுகள், அரசு மற்றும் தனியார் சொத்துக்கள் சேதமடைந்துள்ளன. இது வரை நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

தொடர்ந்து மீட்புப் பணிகள் நடந்து வருகின்றன. இதற்கிடையே, இமாச்சல பிரதேசம் முழுவதையும் இயற்கை பேரிடர் பாதித்த மாநிலமாக அறிவிக்கப் பட்டுள்ளது. வெள்ள பாதிப்புகள் குறித்து இமாச்சல பிரதேச முதல் மந்திரி சுக்வீந்தர் சிங்கிடம் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். இந்நிலையில், இமாச்சல பிரதேசத்தில் நடைபெறும் நிவாரண பணிகளுக்காக தமிழக அரசு சார்பில் ரூ.10 கோடி நிதியுதவி அளிக்கப்படும் என முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

## திருப்பூரில் மாநகர காவல் ஆணையரிடம் புகார் மனு



திருப்பூர், ஆக. 24

திருப்பூர் வெள்ளியங்காடு பட்டுக்கோட்டையார் நகர் பகுதியை சேர்ந்த தங்கபாலு இவரது கடையில் ஹோட்டல் நடத்தி வருகிறார் இந்நிலையில் அவர் அவரது கடையின் சுவற்றில் சசிகலா பிறந்தநாளை ஒட்டி போஸ்டர் ஒட்டியுள்ளார் இதை பொறுத்துக் கொள்ள முடியாத சிலர் அதை கிழித்தெறிந்து தகராறு செய்து வந்துள்ளனர் இதில் இருதரப்பினரிடமும் மோதல் ஏற்பட்டதாக கூறப்படுகிறது மர்ம நபர்கள் பத்துக்கும் மேற்பட்டோர் தங்கபாலுவின் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்ததாக தெரிகிறது மேலும் தங்கபாலுவை கூரிய ஆயுதங்களாலும் கிரிக்கெட் மட்டை ஆகியவை கொணடு தாக்கி படுகாயம் ஏற்படுத்திவிட்டு அங்கிருந்து தப்பிச்சென்றனர் இதில் பலத்த காயமடைந்த தங்க பாலு தனியார் மருத்துவமனையில் உயிருக்கு ஆபத்தான நிலையில் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார் இந்நிலையில் படுகாயம் அடைந்த தங்கபாலுவிற்கு ஆதரவாக தேவர் அமைப்பைச் சேர்ந்த சுமார் 50க்கும் மேற்பட்டவர்கள் மாநகர காவல் ஆணையர் அலுவலகத்தில் மனு அளித்தனர் அதில்

இந்து முன்னணி அமைப்பை தடை செய்ய வேண்டும், தாக்குதல் நடத்திய குண்டர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என அகில இந்திய ஃபார்வர்டு கட்சியின் மாநில துணைத்தலைவர் எஸ் கர்ணன் தேவர் அகில இந்திய மூவேந்தர் முன்னணி கழக மாநில பொதுச் செயலாளர் வி டி பாண்டியன் தேவர் தென்னாடு மக்கள் கட்சியின் மாநில பொதுச் செயலாளர் செந்தில் வாண்டையார். பசும்பொன் பக்தர்கள் பேரவை நிறுவனத் தலைவர் ராயல் லட்சுமணன். அகில இந்திய பசும்பொன்முன்னேற்றகழகமாவட்டஅமைப்பாளர்அய்யனார் முக்குலத்தோர் தேசியக் கழக இளைஞரணி செயலாளர் சுரேஷ் தேவர் உள்ளிட்ட மேலும் முக்கிய நிர்வாகிகள் உடன் இருந்தனர்

## தனியார் மாவு மில்லில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த ரேஷன் அரிசி பறிமுதல்

கடலூர், ஆக. 24

குற்றப்புலனாய்வு போலீசார் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். அதே பகுதியை சேர்ந்த பிச்சை என்பவரை போலீசார் கைது செய்தனர்.

கடலூர் மாவட்டத்தில் ரேஷன் அரிசி கடத்தலை தடுக்கும் விதமாக குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வு போலீசார் தீவிரகண்காணிப்புபணியில்ஈடுபட்டுவருகின்றனர்.திட்டக்குடி தாலுகா மேல் கல் பூண்டி தனியார் மில்லில் ரேஷன் அரிசி மூட்டைகள் இருப்பதாக ரகசிய தகவல் கிடைத்தது. அதன் பேரில் இன்ஸ்பெக்டர் சுரேஷ்குமார் தலைமையில் சப்இன்ஸ்பெக்டர் ராஜேந்திரன், சிறப்பு சப் இன்ஸ்பெக்டர் ஏழுமலை, போலீஸ்காரர்கள் முருகானந்தம், ராஜா, பவானி ஆகியோர் மாவு மில்லுக்கு நேரில் சென்றனர். அங்கு சோதனை மேற்கொண்டபோது, 30 சாக்கு மூட்டைகளில் 1200 கிலோ ரேஷன் அரிசி பதுக்கி வைக்கப்பட்டிருந்தது தெரிய வந்தது. இது தொடர்பாக அதே பகுதியை சேர்ந்த பிச்சை (வயது 63) என்பவரை போலீசார் கைது செய்தனர். பறிமுதல் செய்த ரேஷன் அரிசியை நுகர் பொருள் வாணிபக் கழகத்தில் போலீசார் ஒப்படைத்தனர்.



திருப்பூர் மாவட்டம் அலுவலகத்தில்,3வது மண்டலத்தில் நடைபெற்று வரும் சாலை பணிகள் குறித்து ஆய்வுகூட்டம்நடைபெற்றது. இதில்வடக்குமாநகரகழகசெயலாளர் மேயர்ந. தினேஷ்குமார், மாநகராட்சி ஆணையர் பவன்குமார்ஜி கிரியப்பனவர், துணைமேயர் ஆர் பாலசுப்ரமணியம், மண்டல தலைவர் கோவிந்தசாமி, மாமன்ற உறுப்பினர்களும் மற்றும் மாநகராட்சி அலுவலர்களும் கலந்து கொண்டனர்.



தேமுதிக கட்சியின் பொதுச் செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த் அவர்கள் தேனி மாவட்டம் வீரபாண்டியில் அமைந்துள்ள ஸ்ரீ கௌமாரியம்மன் திருக்கோவிலில் அம்மனை தரிசித்தார். இந்த நிகழ்வில் தேனிமாவட்ட செயலாளர் கிருஷ்ணமூர்த்தி மற்றும் கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.




மக்களின் எண்ணங்களை செயலாக்கிடும் முதலமைச்சர்; தலைவர் மு.க.ஸ்டாலின் ஆணைக்கினங்க. திண்டுக்கல் அரசு விருந்தினர் மாளிகையில், தமிழ்நாடு அரசு சட்ட விதிகள் ஆய்வுக்குழு கூட்டம் குழுத் தலைவர் தாயகம் கவி எம்.எல்.ஏ. தலைமையிலும் மாவட்ட கலெக்டர் முன்னிலையிலும் துவங்கி நடைபெற்றது. தமிழ்நாடு அரசு சட்ட விதிகள் ஆய்வுக்குழு உறுப்பினர் என்ற முறையில் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு மேற்கொள்ளவேண்டிய பணிகள் குறித்து பல்வேறு ஆலோசனைகள் வழங்கி சிறப்பித்தனர்.

# திருப்பூரில் வாலிபர் பீர் பாட்டிலால் குத்திக் கொலை



திருப்பூர், ஆக. 24

திருப்பூர் காங்கேயம் ரோடு வெங்கடேஸ்வரா நகரை சேர்ந்தவர் ரபிக் (28). பனியன் நிறுவனத்தின் டெய்லராக பணியாற்றி வந்தார். இவருக்கு திருமணமாகி குழந்தையும் உள்ளது. அதே பகுதியைச் சேர்ந்தவர் முகமது இலியாஸ் (29) நண்பர்களான இருவரும் மது அருந்துவது வழக்கம். அதே போல் நேற்று இரவு திருப்பூர் யுனிவர்சல் தியேட்டர் அருகே இருவரும் அமர்ந்து மது அருந்தி உள்ளனர். அப்போது ரபிக் தனது நண்பன் முகமது இலியாஸின் மனைவியை தவறாக பேசியதாக தெரிகிறது. இதில் அவர்களுக்கிடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதனால் ஆத்திரமடைந்த முகமது இலியாஸ் தான் கையில் வைத்திருந்த பீர் பாட்டிலை எடுத்து ரபிக் தலையில் பயங்கரமாக அடித்தார். மேலும் உடைந்த பாட்டிலை கொண்டு கழுத்து வயிறு உள்ளிட இடங்களில் சரம்மாரியாக குத்தினார்.இதில் பலத்த காயம் அடைந்த ரபிக் ரத்த வெள்ளத்தில் சம்பவ இடத்திலேயே பலியானார். சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தினர் ஓடி வந்த போது அங்கிருந்து முகமது இலியாஸ் தப்பி ஓடி விட்டார். இது குறித்து திருப்பூர் வடக்கு போலீசருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. தகவல் கிடைத்ததும் இன்ஸ்பெக்டர் உதயகுமார் தலைமையிலான போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து பிணத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக திருப்பூர் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். மேலும் தலை மறைவாக இருந்த முகமது இலியாசை தனிப்படை அமைத்து தேடி வந்தனர். தனிப்படை போலீசார் வெளியூர் தப்பிச் செல்ல முயன்ற முகமது இலியாசை கைது செய்தனர். தொடர்ந்து அவரிடம் திருப்பூர் வடக்கு போலீஸ் நிலையத்தில் வைத்து அவரிடம் விசாரணை நடந்து வருகிறது. திருப்பூரில் நண்பனை பீர் பாட்டிலால் குத்தி கொலை செய்யப் பட்டசம்பவம்பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# கணவர் 'யூடியூப்' பார்த்து பிரசவம்; குழந்தை பெற்ற பெண் சாவு



தர்மபுரி, ஆக. 24

தர்மபுரி மாவட்டம் காரிமங்கலத்தை அடுத்த அனுமந்தபுரம் கிராமத்தை சேர்ந்தவர்மாதேஷ் (வயது 27). இவருக்கும், போச்சம்பள்ளியை அடுத்த புளியம்பட்டி கிராமத்தை சேர்ந்த லோகநாயகிக்கும் (27) கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடந்தது.

கணவன் மனைவி இருவரும் வேளாண்மை பட்டப்படிப்பு படித்தவர்கள். இயற்கையின் மீது ஆர்வம் கொண்டவர்கள். இந்த நிலையில் லோகநாயகி கர்ப்பம் ஆனார். நிறைமாத கர்ப்பிணியான லோகநாயகி, கணவரிடம் வீட்டிலேயே அதுவும் இயற்கையாக வே குழந்தை பெற்றுக் கொள்ள வேண்டும் என்று விருப்பம் தெரிவித்ததாக கூறப்படுகிறது.

'யூடியூப்' பார்த்து பிரசவம் அதன்படி இயற்கை முறையில் எப்படி குழந்தை பெற்றுக்கொள்வது? என்பது குறித்து கணவன் மனைவி இருவரும் 'யூடியூப்' மூலம் பார்த்து வந்தனர்.

இந்த நிலையில், நேற்று காலை லோகநாயகிக்கு பிரசவ வலி ஏற்பட்டது. உடனே இருவரும் பேசிக்கொண்டபடி 'யூடியூப்' பார்த்து மாதேஷ் தன்னுடைய மனைவிக்கு பிரசவம் பார்த்துள்ளார்.

இதில் லோகநாயகிக்கு அழகான ஆண் குழந்தை பிறந்துள்ளது.

அப்போது திடீரென அவருக்கு ரத்தப்போக்கு அதிகமானது. சிறிது நேரத்தில் மயக்க நிலைக்கு சென்ற லோகநாயகியை போச்சம்பள்ளியில் தனியார் ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அங்கு அவரை பரிசோதனை செய்த டாக்டர்கள் லோகநாயகி ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். இதுகுறித்து மாதேஷிடம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மதுரை மாநாட்டிற்கு சென்ற திருப்பூர் அதிமுக தொண்டர் மாரடைப்பால் சாவு: ரூ.6 லட்சம் நிவாரணம் அறிவிப்பு



திருப்பூர், ஆக. 24

அ.தி.மு.க., விசுவாசியான இவர், கோவையில் உள்ள உறவினருடன் இணைந்து, மதுரை மாநாட்டுக்கு சென்றார். எடப்பாடி பழனிசாமி மாரிமுத்து குடும்பத்துக்கு ஆறு லட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கப்படுமென அறிவித்துள்ளார்.

திருப்பூர்மதுரைமாநாட்டுக்கு சென்று திரும்பியபோது, மாரடைப்பால் இறந்த கட்சி தொண்டருக்கு, ஆறு லட்சம் ரூபாய் நிவாரணம் அறிவிக்கப்பட்டுள்ளது. திருப்பூர் தெற்கு தொகுதிக்கு உட்பட்ட பெரிச்சிபாளையம் அண்ணமார் காலனி பகுதியை சேர்ந்தவர்மாரிமுத்து, (48). அ.தி.மு.க., விசுவாசியான இவர், கோவையில் உள்ள உறவினருடன்இணைந்து, மதுரை மாநாட்டுக்கு சென்றார். மாநாடு நிறைவடைந்தபிறகு, அங்கிருந்து, திருப்பூர் குழுவினருடன் திருப்பூர் புறப்பட்டார். வேனில் வந்து கொண்டிருந்த போது, திடீரென மயங்கி விழுந்தவரை சோதித்த போது, மாரடைப்பால் இறந்தது தெரியவந்தது. அதன்பின், உடலை திருப்பூர் எடுத்து வரப்பட்டு, அடக்கம் செய்யப்பட்டது.

இந்த நிலையில் திருப்பூர் மாநகர் மாவட்ட செயலாளர் பொள்ளாச்சி ஜெயராமன், எம்.எல்.ஏ., முன்னாள் எம்.எல்.ஏ., குணசேகரன் ஆகியோரது பரிந்துரைப்படி, பொது செயலாளர் எடப்பாடி பழனிசாமி, இறந்த மாரிமுத்து, குடும்பத்துக்கு, ஆறு லட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கப்படுமென அறிவித்துள்ளார்.

# திருப்பூர் மாநகராட்சி அதிமுக கவுன்சிலர்கள் வார்டுகளில் பணிகள் நடைபெறாமல் புறக்கணிப்பு



திருப்பூர், ஆக. 24

ஒப்பந்ததாரர்கள் பணியைவிரைந்துமுடிக்க வேண்டும் என உத்தரவிட்டார். மாநகராட்சி அதிகாரிகள் அதிமுக கவுன்சிலர் கூறும் குற்றச்சாட்டை கண்டு கொள்வதில்லை.

திருப்பூர் மாநகராட்சி மூன்றாவது மண்டல கூட்டம் திருப்பூர் மாநகராட்சி மேயர் தினேஷ்குமார் தலைமையில் நடைபெற்றது. இதில் மாநகராட்சி கமிஷனர் பவன் குமார், துணை மேயர் பாலசுப்பிரமணியம், மண்டல தலைவர் கோவிந்தசாமி மற்றும் கவுன்சிலர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் மேயர் தினேஷ்குமார் பேசியதாவது: திருப்பூர் மாநகராட்சியில், 4வது குடிநீர் திட்டம், பாதாள சாக்கடை திட்டம், புதிய ரோடுகள் அமைத்தல், வடிகால், சிறுபாலம், பள்ளி வகுப்பறைகள் கட்டுதல் உள்பட பணிகள் நடந்து வருகிறது. நகரில் உள்ள அனைத்து வார்டுகளிலும் ஏதாவது, ஒரு திட்டத்தின் கீழ் ஏதாவது ஒரு பணி என்ற வகையில் நடந்து வருகிறது. இதனால், நகர் பகுதி மக்கள் பெரும் சிரமத்துக்கும், அவதிக்கும் ஆளாகி வருகின்றனர். போக்குவரத்துக்கும் பெரும் இடையூறு நிலவுகிறது. எனவே ஒப்பந்ததாரர்கள் பணியை விரைந்து முடிக்க வேண்டும் என உத்தரவிட்டார். பின்னர் திருப்பூர் மாநகராட்சி எதிர்க்கட்சி கொரடாவும் 44 வது வார்டு கவுன்சிலருமான கண்ணப்பன் பேசியதாவது: மாநகராட்சியின் மையப்பகுதியாக, மத்திய பஸ் ஸ்டாண்ட், மார்க்கெட் உள்ளிட்ட பல்வேறு பகுதிகள் அடங்கிய வார்டாக உள்ளது 44 வது வார்டு. ஆனால் அதிமுக கவுன்சிலர் வார்டு என்பதால் இந்த வார்டில் எந்த பணிகளும் நடைபெறாமல் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருகிறது. ஆனால் திமுக மற்றும் அதன் கூட்டணி கட்சி கவுன்சிலர்களின் வார்டுகளில் ஏராளமான பணிகள் நடைபெற்று வருகிறது. குறிப்பாக ஐம்பதாவது வார்டில் 39 பணிகளும், 51 வது வார்டில் 41 பணிகளும், 56 வது வார்டில் 44 பணிகளும், 33 வது வார்டில் 19 பணிகளும் நடைபெற்று உள்ளது. ஆனால் அதிமுக கவுன்சிலர் வார்டான எனது வார்டில் இது வரை வெறும் 4 பணிகள் மட்டும் நடந்துள்ளது. காரணம் கேட்டால் 44 வது வார்டில் 24 மணி நேரமும் குடிநீர் வழங்கும் பணிகள் முடிந்தவுடன் மற்ற பணிகள் நடக்கவிருப்பதாக கூறுகின்றனர். ஆனால் பக்கத்து வார்டான 51 வார்டிலும் 24 மணி நேர குடிநீர் திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. ஆனால் அங்கு 41 பணிகள் நடந்துள்ளது. மேலும் 44 வது வார்டில் 24 மணி நேர குடிநீர் திட்டம் பாதி தெருகளுக்கு தான் வந்துள்ளது. இது தொடர்பாக மாநகராட்சி கமிஷனரிடம் 300 கடிதம் கொடுத்தும் இது வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாநகராட்சி அதிகாரிகள் அதிமுக கவுன்சிலர் கூறும் குற்றச்சாட்டை கண்டு கொள்வதில்லை. இந் நிலை நீடித்தால் வார்டு மக்களை திரட்டி மாநகராட்சி நிர்வாகத்துக்கு எதிராக உண்ணாவிரத போராட்டம் நடத்தப்படும்.இவ்வாறு அவர் பேசினார். இதற்கு பதில் அளித்து பேசிய மேயர் தினேஷ்குமார் மாநகராட்சியில் உள்ள 60 வார்டுகளிலும் எந்த பாகுபாடு காட்டாமல் பணிகள் நடைபெறுவதாக கூறினார்.

# ஓணம் பண்டிகைக்கு திருப்பூரில் 29ந் தேதி உள்ளூர் விடுமுறை

திருப்பூர், ஆக. 24

திருப்பூர் மாநகராட்சி மூன்றாவது மண்டல கூட்டம் திருப்பூர் மாநகராட்சி மேயர் தினேஷ்குமார் தலைமையில் நடைபெற்றது. இதில் மாநகராட்சி கமிஷனர் பவன் குமார், துணை மேயர் பாலசுப்பிரமணியம், மண்டல தலைவர் கோவிந்தசாமி மற்றும் கவுன்சிலர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் மேயர் தினேஷ்குமார் பேசியதாவது: திருப்பூர் மாநகராட்சியில், 4வது குடிநீர் திட்டம், பாதாள சாக்கடை திட்டம், புதிய ரோடுகள்அமைத்தல், வடிகால், சிறுபாலம், பள்ளி வகுப்பறைகள் கட்டுதல் உள்பட பணிகள் நடந்து வருகிறது. நகரில் உள்ள அனைத்து வார்டுகளிலும் ஏதாவது, ஒரு திட்டத்தின் கீழ் ஏதாவது ஒரு பணி என்ற வகையில் நடந்து வருகிறது. இதனால், நகர் பகுதி மக்கள் பெரும் சிரமத்துக்கும், அவதிக்கும் ஆளாகி வருகின்றனர். போக்குவரத்துக்கும் பெரும் இடையூறு நிலவுகிறது. எனவே ஒப்பந்ததாரர்கள் பணியை விரைந்து முடிக்க வேண்டும் என உத்தரவிட்டார். பின்னர் திருப்பூர் மாநகராட்சி எதிர்க்கட்சி கொரடாவும் 44 வது வார்டு கவுன்சிலருமான கண்ணப்பன் பேசியதாவது: மாநகராட்சியின் மையப்பகுதியாக, மத்திய பஸ் ஸ்டாண்ட், மார்க்கெட் உள்ளிட்ட பல்வேறு பகுதிகள் அடங்கிய வார்டாக உள்ளது 44 வது வார்டு. ஆனால் அதிமுக கவுன்சிலர் வார்டு என்பதால் இந்த வார்டில் எந்த பணிகளும் நடைபெறாமல் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருகிறது. ஆனால் திமுக மற்றும் அதன் கூட்டணி கட்சி கவுன்சிலர்களின் வார்டுகளில் ஏராளமான பணிகள் நடைபெற்று வருகிறது. குறிப்பாக ஐம்பதாவது வார்டில் 39 பணிகளும், 51 வது வார்டில் 41 பணிகளும், 56 வது வார்டில் 44 பணிகளும், 33 வது வார்டில் 19 பணிகளும் நடைபெற்று உள்ளது. ஆனால் அதிமுக கவுன்சிலர் வார்டான எனது வார்டில் இது வரை வெறும் 4 பணிகள் மட்டும் நடந்துள்ளது. காரணம் கேட்டால் 44 வது வார்டில் 24 மணி நேரமும் குடிநீர் வழங்கும் பணிகள் முடிந்தவுடன் மற்ற பணிகள் நடக்கவிருப்பதாக கூறுகின்றனர். ஆனால் பக்கத்து வார்டான 51 வார்டிலும் 24 மணி நேர குடிநீர் திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. ஆனால் அங்கு 41 பணிகள் நடந்துள்ளது. மேலும் 44 வது வார்டில் 24 மணி நேர குடிநீர் திட்டம் பாதி தெருகளுக்கு தான் வந்துள்ளது. இது தொடர்பாக மாநகராட்சி கமிஷனரிடம் 300 கடிதம் கொடுத்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாநகராட்சி அதிகாரிகள் அதிமுக கவுன்சிலர் கூறும் குற்றச்சாட்டை கண்டு கொள்வதில்லை. இந் நிலை நீடித்தால் வார்டு மக்களை திரட்டி மாநகராட்சி நிர்வாகத்துக்கு எதிராக உண்ணாவிரத போராட்டம் நடத்தப்படும்.இவ்வாறு அவர் பேசினார்.

இத ற்கு பதில் அளித்து பேசிய மேயர் தினேஷ்குமார் மாநகராட்சியில் உள்ள 60 வார்டுகளிலும் எந்த பாகுபாடு காட்டாமல் பணிகள் நடைபெறுவதாக கூறினார்.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# சென்னை விமான நிலையத்தில் அரியவகை உயிரினங்கள் பறிமுதல்: சுங்க இலாகா அதிகாரிகள் விசாரணை




சென்னை, ஆக. 24

தாய்லாந்து நாட்டில் இருந்து சென்னை விமான நிலையத்துக்கு கடத்தி வரப்பட்ட அரியவகை உயிரினங்களை சுங்க இலாகா அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

சென்னை மீனம்பாக்கம் அண்ணா பன்னாட்டு விமான நிலையத்திற்கு தாய்லாந்து தலைநகர் பாங்காக்கில் இருந்து பயணிகள் விமானம் வந்தது. இதையடுத்து, அதில் வந்த பயணிகளை சென்னை விமான நிலைய சுங்க இலாகா அதிகாரிகள் தீவிரமாக கண்காணித்தனர். அப்போது அங்கு வந்திறங்கிய சென்னையை சேர்ந்த பயணி மீது சுங்க இலாகா அதிகாரிகளுக்கு சந்தேகம் ஏற்பட்டது. அவரை நிறுத்தி விசாரித்தனர். அவர் முன்னுக்கு பின் முரணாக பேசியதால் உடைமைகளை சோதனை செய்தனர்.

அப்போது உடமைகளில் இருந்த கூடையில் லேசாக அசைவது போல் தெரிந்தது. இதையடுத்து சுங்க இலாக அதிகாரிகள் அதை திறந்து பாா்த்ததில், அரிய வகை உயிரினங்கள் இருப்பதை கண்டுபிடித்தனர். அவற்றில் காடுகளில் வாழும் மலைப்பாம்பு குட்டிகள், நீலநிற உடும்பு, அபூர்வ வகை அணில்கள் உள்பட 50 உயிரினங்கள் இருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தனர்

இதை கொண்டு வந்த பயணியிடம் விசாரித்த போது, அவை அபூர்வ வகை குட்டிகள் என்றும், இதை வளர்க்க எடுத்து வந்திருப்பதாகவும் கூறினார். ஆனால் விலங்குகளுகளை மருத்துவ பரிசோதனைசெய்துவிமானத்தில் கொண்டு வந்ததற்கான தடையில்லா சான்றிதழ்கள் உள்பட எந்தவித உரிய ஆவணங்களும் இல்லாமல் இருப்பது தெரியவந்தது. இதைத்தொடர்ந்து, எந்தவிதமான சான்றிதழ்களும் இல்லாததால் அபூர்வ உயிரினங்களை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். இதையடுத்து அந்த அரிய வகை உயிரினங்களை மீண்டும் தாய்லாந்து நாட்டிற்கு திருப்பி அனுப்ப முடிவு செய்யப்பட்டு உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இது தொடர்பாக உயிரினங்களை கடத்தி வந்த வாலிபரிடம் அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர்.

# அ.தி.மு.க மாநாட்டிற்கு செல்லும் போது விபத்து: காயமடைந்த 3 பேரை நேரில் சந்தித்து எம்.எல்.ஏ. ஆறுதல்



மத்தூர், ஆக 24

அ.தி.மு.க. மாநாட்டிற்கு தொண்டர்கள் பேருந்துகள்மூலம் சென்ற போது எதிர்பாராத விதமாக விபத்து ஏற்பட்டது. வேப்பனப்பள்ளி தொகுதி எம்.எல்.ஏ வுமான கே.பி. முனுசாமி காய மடைந்த 3 பேரின் இல்லங்க ளுக்கு நேரில் சென்று நலன் விசா–ரித்து ஆறுதல் கூறினார்.

கிருஷ்ணகிரி மாவட்டம், மத்தூர் ஒன்றியத்தில் இருந்து மதுரையில் நடைபெற்ற அ.தி.மு.க. மாநாட்டிற்கு தொண்டர்கள் பேருந்துகள்மூலம் சென்ற போது எதிர்பாராத விதமாக விபத்து ஏற்பட்டது. இதில் பயணம்செய்த மலையாண்டஅள்ளி பகுதியை சேர்ந்த அன்பரசு வயது (26), புட்டாமூப்பர் கொட்டாய் பகுதியை கருணாநிதி (57), அதே பகுதியை சேர்ந்த ராஜேந்திரன் வயது (57) ஆகிய 3 பேரும் காயமடைந்து சிகிச்சை பெற்று வருகி–றார்கள். இவர்களை முன்னாள் அமைச்சரும், அ.தி.மு.க துணை பொது செயலாளர் மற்றும் வேப்பனப்பள்ளி தொகுதி எம்.எல்.ஏ வுமான கே.பி.முனுசாமி காய மடைந்த 3 பேரின் இல்லங்க ளுக்கு நேரில் சென்று நலன் விசா–ரித்து ஆறுதல் கூறினார். இதில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் கே.அசோக்குமார், ஊத்தங்கரை தொகுதி எம்.எல்.ஏ தமிழ்செல்வம் முன்னாள் எம்.எல்.ஏ. மனோரஞ்சிதம் நாகராஜ் ஆகியோர் நேரில் சென்று பார்த்து ஆறுதல் கூறி நிதி உதவி வழங்கினார்கள். இதில் மத்தூர் ஒன்றிய செயலாளர்கள் சக்கரவர்த்தி, தேவராசன், மாவட்ட இணை செயலாளர்சாகுல்அமித், மாவட்ட சிறுபாண்மை பிரிவு இணை செயலாளர் பியாரே ஜான், மத்தூர் ஊராட்சி மன்றத் தலைவர் மீனா சக்தி, ஒன்றிய இணை செயலாளர் ஜெயந்தி புகழேந்தி,

ஒன்றிய துணை செயலாளர் இந்தியாஸ் ஷாஜஹான், ஒன்றிய இளைஞரணி செயலாளர் முருகன், சிவம்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் பழனியம்மாள் மனோகரன், ராமகி–ருஷ்ணம்பதி ஊராட்சி மன்றத் தலைவர் இந்திரா ராமன், மாவட்ட எம்.ஜி.ஆர்.மன்றத் துணைத் தலைவர் விநாயகமூர்த்தி மாவட்ட இளம் பாசறை செயலாளர் முரளி பிரசாத், மாவட்ட எம்.ஜி.ஆர்.மன்ற இணை செயலாளர் மணி, ஒன்றிய மீனவரணி செயலா ளர் முனுசாமி, ஒன்றிய அம்மா பேரவை இணை செயலாளர் செல்வம், ஒன்றிய தகவல் தொழில் நுட்ப பிரிவு செயலாளர் திருமால், ஒன்றிய மாணவ ரணி துணை செயலாளர் சுரேஷ், இளம் பாசறை பாண்டியன்,

# கோவையில் பொதுமக்கள் கியூஆர் கோடு பயன்படுத்தி புகார் கொடுக்க ஏற்பாடு

கோவை, ஆக. 24

வாரந்தோறும் செவ்வாய்க்கிழமைகளில் பொதுமக்கள் குறைதீர்ப்பு கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. மாநகராட்சி சார்பில் சுமார் 5 லட்சம் கியூஆர்கோடுஸ்டிக்கர்கள் தயாரிக்கப்பட்டு உள்ளன.

கோவை மாவட்டத்தில் சிறுவாணி, பில்லூர்1, பில்லூர்2, ஆழியாறு, வடவள்ளிகவுண்டம்புதூர் கூட்டு குடிநீர்த்திட்டம் ஆகியவற்றின் மூலம் ராட்சத குழாய்களில் தண்ணீர் கொண்டு வரப்பட்டு, மாநகரம் முழுவதும் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதுதவிர மாநகர அளவில் போக்குவரத்து பாலங்கள், தார்சாலை, சாக்கடை கால்வாய், அங்கன் வாடிமையம், பள்ளி வகுப்பறைகள் உள்பட பல்வேறு திட்டப்பணிகள் நடந்து வருகின்றன. கோவை மாநகராட்சியில் வசிக்கும் பொதுமக்கள் குறை தெரிவிப்பதற்கு ஏதுவாக தொலைபேசி எண்கள் பயன்பாட்டில் உள்ளன.

இதுதவிர வாரந்தோறும் செவ்வாய்க்கிழமைகளில் பொதுமக்கள் குறைதீர்ப்பு கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. இதற்கிடையே கோவை மாநகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் குடிநீர், வரிவிதிப்பு மற்றும் பல்வேறு அம்சங்கள்தொடர்பாக பொதுமக்களிடம் இருந்து செல்போன் மூலம் கருத்துக்களை பெறுவது என்று அதிகாரிகள் முடிவு செய்து உள்ளனர்.

இதற்காக மாநகராட்சி சார்பில் சுமார் 5 லட்சம் கியூஆர்கோடு ஸ்டிக்கர்கள் தயாரிக்கப்பட்டு உள்ளன.

அவற்றை வீடுவீடாக சென்று ஒட்டும் பணியில் ஊழியர்கள் ஈடுபட உள்ளனர். இதுகுறித்து கோவை மாநகராட்சி கமிஷனர் பிரதாப் கூறியதாவது:

மாநகர அளவில் குடிநீர் விநியோகம், சொத்து வரி விதிப்பு உள்ளிட்ட சேவைகள் மற்றும் திட்டப்பணிகள் குறித்து பொது மக்களின் கருத்துகளை அறிந்து கொள்வதற்காக கியூஆர்கோடு ஸ்டிக்கர் திட்டம் அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

இதுமாநகரின்அனைத்து பகுதிகளிலும் ஒட்டப்படும். எனவே பொதுமக்கள் ஆன்டிராய்டு செல்போனில் கியூஆர்கோடை ஸ்கேன் செய்து, அதன்மூலம் மாந கராட்சி அலுவலகத்தை தொடர்பு கொண்டு தங்க ளின் புகார்கள் மற்றும் கருத்துக்களை தெரிவிக்கலாம் என்றார்.

# பந்தலூரில் பதுங்கிய சிறுத்தை: வனத்துறை தேடுதல் வேட்டை

ஊட்டி, ஆக. 24

நீலகிரி மாவட்டம் பந்தலூர் அடுத்த சேரம்பாடி அரசு தேயிலைத் தோட்டக் கழகம் பகுதியில் ஒரு சிறுத்தை பதுங்கி உள்ளது. இது கடந்த சில நாட்களாக அங்கு திரியும் ஆடுகள் மற்றும் நாய்களை அடித்து கொன்று வருகிறது. இதுகுறித்து அந்த பகுதியை சேர்ந்தவர்கள் வனத்துறைக்கு புகார் தெவித்தனர். புகாரின்பேரில் மாவட்ட வனஅலுவலர் கொம்மு ஓம்காரம் உத்தரவின்பேரில், உதவி வனப் பாதுகாவலர் கருப்பையா மற்றும் ஊழியர்கள் சேரம்பாடிக்கு விரைந்து வந்து ஊருக்குள் பதுங்கி உள்ள சிறுத்தையை வலைவீசி தேடி வருகின்றனர். இதன் ஒருபகுதியாக ட்ரோன் கேமரா மூலம் சேரம்பாடி பகுதியில் தேடுதல் வேட்டை நடத்தப்பட்டது. இதுதவிர போலீசார் பல்வேறு இடங்களில் சிறுத்தை நடமாட்டத்தை தீவிரமாக கண்காணித்து வருகின்றனர்.

# தருமபுரம் ஆதீன கலைக்கல்லூரி பவள விழா

தரங்கம்பாடி, ஆக. 24

மயிலாடுதுறையில் பழமையானதருமபுரம்ஆதீன மடம் உள்ளது. இதன் அருகிலேயே ஆதீனத்திற்கு சொந்தமான தருமபுரம் ஆதீன கலைக் கல்லூரி அமைந்துள்ளது. இக்கல்லூரியின் 75ம் ஆண்டு பவளவிழாகொண்டாடப்பட்டு வருகிறது. இதனிடையே கல்லூரியில் கட்டப்பட்டுள்ள புதிய கலையரங்கத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நாளை 24ஆம் தேதி திறந்து வைத்து சிறப்புரயாற்ற உள்ளார். மேலும் ஒலி ,ஒளி தொலைக்காட்சி, வானொலி பதிவகத்தை தொடங்கிவைத்து மற்றும் பவள விழா மலர், திருக்குறள் ஆதீன உரை விளக்க நூல் ஆகியவற்றை வெளியிடுகிறார். இந்தக்கல்லூரியில் வெள்ளி விழா ஆண்டில் அப்போதைய முதல்வர் கலைஞர் கருணாநிதி பங்கேற்றார். தற்போது பவள விழா ஆண்டில் முதலமைச்சர் கலந்து கொள்வது சிறப்புக்குரியதாகும். இந்த நிலையில் கலையரங்கத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளபணிகள்குறித்து சுற்றுச்சூழல் துறை அமைச்சர் மெய்யநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



தருமபுரம் ஆதீனம் 27 வது குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியார் சுவாமிகளிடம் விழா ஏற்பாடுகள் குறித்து சிறிது நேரம் கலந்துரையாடினார். இந்த நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள் ராஜகுமார், நிவேதா முருகன் மற்றும் பன்னீர்செல்வம், நகர மன்ற தலைவர் செல்வராஜ் உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தருமபுரம் ஆதீனம் முப்பெரும் விழாவாக நடைபெறும். இந்த நிகழ்வுகளில் அனைவரும் பங்கேற்று சிறப்பிக்குமாறு வேண்டுகோள் விடுத்தார்.

# உள்ளூர் பிரபல உற்பத்தி பொருட்கள் மூலம் ரூ.2¼ கோடி வருமானம் ஈட்டிய வியாபாரிகள்

மதுரை, ஆக. 24

மதுரைகோட்டத்தில் 27 ரெயில் நிலையங்களில் உள்ளூர் பிரபல உற்பத்தி பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. அந்த வகையில், மதுரை ஜங்ஷன் ரெயில் நிலையத்தில் 33 சுங்குடி சேலை உற்பத்தியா–ளர்கள் தலா 15 நாட்கள் தொடர்ந்து சுங்குடி சேலை–கள் விற்பனை செய்து சாதனை படைத்துள்ளனர். அதன் மூலம் வருமான அள–வாக ரூ.81 லட்சத்து 91 ஆயிரத்து 847 ஈட்டியுள்ளனர். இதேபோல திருநெல்வேலி ரெயில் நிலையத்தில் பத்தமடை பாய் விற்பனை–யில் ரூ.28 லட்சத்து 23 ஆயி–ரத்து 71ம், தூத்துக்குடியில் மக்ரூன் விற்பனையில் ரூ.23 லட்சத்து 56 ஆயிரத்து 270, திருச்செந்தூரில் பனை பொருட்கள் விற்பனையில் ரூ.23 லட்சத்து 35 ஆயிரத்து 405, கோவில்பட்டியில் கடலை மிட்டாய் விற்பனை–யில் ரூ.15 லட்சத்து 43 ஆயி–ரத்து 975, திண்டுக்கல்லில் சின்னா–ளப்பட்டி கைத்தறி சேலை விற்பனையில் ரூ.12 லட்சத்து 24 ஆயிரத்து 297, ஸ்ரீவில்லிபுத்தூரில் பால்கோவா விற்பனையில் ரூ.5 லட்சத்து 97 ஆயிரத்து 655, தென்கா–சியில் மூங்கில் மர வீட்டு உபயோகப் பொருட்கள் விற்பனையில் ரூ.5 லட்சத்து 79 ஆயிரத்து 210, ராமநாத–புரத்தில் கருவாடு விற்பனை–யில் ரூ.5 லட்சத்து 34 ஆயி–ரத்து 650, ராமேசுவரத்தில் கடல் பாசி பொருட்கள் விற்பனை–யில் ரூ.3 லட்சத்து 67 ஆயி–ரத்து 201, மணப்பாறை–யில் முறுக்கு விற்பனையில் ரூ.3 லட்சத்து 55 ஆயிரத்து 10, மண்டபத்தில் வெட்டிவேர் பொருட்கள் விற்பனையில் ரூ.3 லட்சத்து 575, காரைக்கு–டியில் செட்டிநாடு நொறுக் குத்தீனிகள் விற்ப–னையில் ரூ.3 லட்சத்து 429, சாத்தூரில் சேவு விற்பனையில் ரூ.2 லட்சத்து 97 ஆயிரத்து 640 என உள்ளூர் சிறு குறு உற் பத்தியாளர்கள் வருமா–னம் ஈட்டியுள்ளனர். இதன் மூலம் மொத்தத்தில் ரூ.2 கோடியே 18 லட்சத்து 7 ஆயிரத்து 235 வரு–மானம் பெற்றுள்ள உள்ளூர் சிறு, குறு உற்பத்தியாளர்கள் பெரிதும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மேலும் கொட்டாரக்கரா மற்றும் புனலூரில் தேங்காய் எண்ணெய், மசாலா பொருட்கள், விருதுநகரில் சேவு, அம்பாசமுத்திரத்தில் குழந்தைகளுக்கான மரப்பாச்சி எனப்படும் மரத்தால் செய்யப்பட்ட விளையாட்டு பொருட்கள், பழனியில் பஞ்சாமிர்தம், சிவகங்கை–யில் செட்டிநாடு நொறுக்கு தீனிகள், கொடைக்கானல் ரோட்டில் கொடைக்கானல் மலை சார்ந்த உற்பத்தி பொருட் கள், ராஜபாளையத்தில் ஆயத்த ஆடைகள், பரமக்கு–டியில் விவசாய விளை–பொருட்கள், வாஞ்சி மணி–யாச்சியில் மக்ரூன், மானாம–துரையில் மண்பாண்ட பொருட்கள், சிவகாசியில் பேப்பர் சார்ந்த தயாரிப்பு–கள் விற்பனை நடைபெற்று வருகிறது. ரெயில் நிலையங்களில் உள்ளூர் உற்பத்தி பொருட் களை விற்பனை செய்ய விரும்புபவர்கள் கைவினை பொருட்கள் வளர்ச்சி ஆணையர் அல்லது கைத்தறி வளர்ச்சி ஆணையர் அல் லது மத்திய, மாநில அரசு அதிகாரிகள் வழங்கிய அடையாள அட்டை வைத் தி–ருப்பது அல்லது பழங்குடி கூட்டுறவு விற்பனை வளர்ச்சி கூட்டமைப்பு, தேசிய கைத்தறி வளர்ச்சி கழகம், காதி கிராம தொழில் ஆணையம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றில் பதிவு செய்த கைவினைஞர்கள், நெசவாளர்கள் அல்லது சுய உதவி குழுக்கள் அல்லது




சமூகத்தில் நலிவடைந்த பிரிவினராக இருக்க வேண் டும். உள்ளூர் உற்பத்தியாளர்க–ளுக்கு வாய்ப்பு வழங்க வெளிப்படை தன்மையுள்ள நடைமுறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றன. இதற்காக விருப்பமுள்ள தகுதி வாய்ந்த உற்பத்தியாளர்கள், கைவினைஞர்கள், நெசவா–ளர்கள் ஆகியோரிடம் இருந்து விருப்ப விண்ணப் பம் பெறப்படுகிறது. இதற்காக நியமிக்கப்பட்ட தேர்வுக்குழுவானது, குலுக் கள் முறையில் விண்ணப்பங் களை தேர்ந்தெடுக்கிறது. இதன்மூலம் தகுதி வாய்ந்த நபர்கள் ரெயில் நிலையத் தில் 15 நாட்களுக்கு தங்களது உற்பத்தி பொருட்களை விற்பனை செய்து கொள்ள–லாம். இது உள்ளூர் சிறு, குறு உற்பத்தியாளர்களின் வாழ் வாதாரத்தை உயர்த்தும் வகையில் ரெயில் நிலையங்க–ளில் தங்களது உற்பத்தி பொருட்களை விற்பனை செய்து கூடுதல் வருமானம் பெற வாய்ப்பாக அமைகி–றது. உற்பத்தியாளர்கள் விண்ணப்பத்துடன் ரூ.1,000 பதிவு கட்டணம் மட்டும் ரெயில்வே துறைக்கு செலுத் தினால் போதுமானது. சிறிய ரெயில் நிலையங்க–ளில் பயணிகள் பயன்பாட் டிற்கேற்ப பதிவு கட்டணம் ரூ.500 ஆக நிர்ணயிக்கப்படுகிறது. உள்ளூர் தயாரிப்பு பொருட்களை பயணிகள் ஆர்வமுடன் வாங்குவதாக–வும், அதன் மூலம் தங்களது வாழ்வாதாரம் மேம்பட்டுள்ளதாகவும்உள்ளூர் பொருட் கள் உற்பத்தியா–ளர்கள் தெரிவித்துள்ளனர்.

# சென்னைபுறநகரில் பரவலாக மழை: புழல் ஏரிக்கு நீர்வரத்து அதிகரிப்பு

காஞ்சிபுரம், ஆக. 24

தமிழக பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக கடந்த 2 நாட்களாக சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இரவு மற்றும் காலை நேரங்களில் விட்டு விட்டு மழை பெய்து வருகிறது. நேற்று இரவும் சென்னையில் பல்வேறு இடங்களில் மழை கொட்டியது. எழும்பூர், புரசைவாக்கம், பெரம்பூர், செங்குன்றம், புழல், அயனாவரம், கோயம்பேடு, கோடம்பாக்கம், போரூர், ராயபுரம், தண்டையார்பேட்டை, திருவொற்றியூர், மீனம்பாக்கம், வேளச்சேரி, தாம்பரம், ஆலந்தூர், திருவான்மியூர் உள்ளிட்ட இடங்களில் இரவு தொடங்கிய மழை அதிகாலை வரை நீடித்தது. பலத்த மழை இல்லாமல் சாரல்மழையாக பெய்தது. சில இடங்களில் சுமார் அரைமணிநேரம் மழை வெளுத்து வாங்கியது. இதேபோல் காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டங்களிலும் பரவலாக மழை கொட்டியது. அதிகபட்சமாக திருவள்ளூர் மாவட்டம் ஆர்.கே.பேட்டையில் 9 செ.மீட்டர் மழை பதிவாகி உள்ளது. காஞ்சிபுரம்



மற்றும் அதன் சுற்று வட்டாரபகுதிகளானஓரிக்கை, செவிலிமேடு, ஒலி முகமது பேட்டை, பாலுசெட்டி சத்திரம், தாமல், வாலாஜாபாத், பரந்தூர், மாகரல், ஆர்ப்பாக்கம் உள்ளிட்ட இடங்களில் இன்று காலையும் மழை பெய்தது. இதனால் பள்ளி கல்லூரிக்கு செல்லும் மாணவ மாணவிகளும், வேலைக்கு செல்வோரும் அவதி அடைந்தனர். திருவள்ளூர் ஆர்.கே. பேட்டை, திருத்தணி, ஊத்துக்கோட்டை, திருவாலங்காடு உள்ளிட்ட இடங்களில் மழை வெளுத்துவாங்கியது. இதனால் தாழ்வான இடங்களில் மழைநீர் தேங்கியது.

# தமிழக மக்களின் நலனுக்கு எதிராக கவர்னர் செயல்படுகிறார்: முத்தரசன்

ஈரோடு, ஆக. 24

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் முத்தரசன் ஈரோட்டில் கட்சி அலுவலகத்தில் இன்று நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது: பா.ஜ.க. பொறுப்பேற்று 10 ஆண்டு காலம் ஆகியும் தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றவில்லை. அதற்கு மாறாக விலைவாசிநாள்தோறும்உயர்ந்து வருகிறது. கட்டுப்படுத்துவதற்கு எந்தவித முயற்சிகளையும் மத்திய அரசு மேற்கொள்ளவில்லை. பிரதமர் செல்லும் இடங்களில் குடும்ப அரசியல் மற்றும் ஊழலை பற்றி மட்டுமேபேசுகிறார். ஊழலை பற்றி பேசுவதற்கு பிரதமருக்கு தார்மீக பலம் இருக்கிறதா என்பதை அவர் யோசிக்க வேண்டும். ஊழல், வேலையில்லா திண்டாட்டம் இதையெல்லாம் கண்டித்து வருகிற செப்டம்பர் 12, 13, 14 ஆகிய மூன்று நாட்களுக்கு தமிழ்நாட்டில் தொடர்மறியல் போராட்டம் நடத்துவது என்று முடிவு செய்துள்ளோம். 12ம் தேதி அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும், 13,14 இரு நாட்களில் வட்ட மற்றும் ஒன்றிய அளவில் மறியல் போராட்டம் நடத்தப்படும். தமிழ்நாடு ஆளுநர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு போட்டி அரசாங்கத்தையும் கலவரத்தை ஏற்படுத்தும் நோக்கிலும் செயல்பட்டு வருகிறார். அவரது நடவடிக்கை அரசாங்கத்திற்கு எதிரானது மட்டுமல்ல தமிழ்நாடு மக்களின் நலனுக்கு எதிரான நடவடிக்கையாக உள்ளது. அரசு பணியாளர் தேர்வாணையம் தலைவர் மற்றும் உறுப்பினர்களை பூர்த்தி செய்ய வேண்டும், ஆனால் அரசை செயல்படுத்த முடியாத நடவடிக்கையை ஆளுநர் மேற்கொண்டு வருகிறார். ஆளுநரின் செயல்பாட்டை எதிர்த்து குடியரசுத் தலைவரிடம் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டு முறையீடு செய்துள்ளார்கள். ஆனால் இதுவரை குடியரசுத் தலைவர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தமிழ்நாட்டில் ஏட்டிக்கு போட்டியாக தொடர்ந்து வன்முறையை தூண்டக்கூடிய வகையில் கவர்னரின் நடவடிக்கை உள்ளது. கவர்னரை கண்டித்து தமிழ்நாட்டு நலன் கருதி கவர்னரின் அராஜகத்தை கண்டித்து மக்களே வெகுண்டெழுந்து போராட வேண்டிய நிலைமை ஏற்படும். இது போன்று ஏற்படும் சட்டம் ஒழுங்கு பிரச்சனைக்கு கவர்னரும், மத்திய அரசும் தான் பொறுப்பேற்க வேண்டும். காலை உணவு திட்டத்தை தமிழ்நாடு அரசு மேற்கொள்வது வரவேற்கத்தக்கது. 25ம் தேதி முதலமைச்சர் இந்த திட்டத்தை தொடங்கி வைக்க உள்ளார். அனைத்து பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் கடிதம் எழுதி 25ம் தேதி அவரவர் தொகுதியில் திட்டத்தை தொடங்கி வைக்க வேண்டும் என கூறியிருக்கிறார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் அவரவர் தொகுதியில் தொடக்கநிகழ்ச்சியில் பங்கேற்பார்கள். கட்சி பாகுபாடு இல்லாமல் அனைத்து பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் பங்கேற்க வேண்டும். நாட்டிலேயே மிக மோசமான முறையில் தமிழக மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களின் உயிர் உடமை பாதுகாப்பில்லாத நிலை தொடர்ந்து நீடிக்கிறது. இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்களின் பொருட்கள் கொள்ளையடிக்கப்படுவதும், சேதப்படுத்தப்படுவதும் தொடர்ந்து வருகிறது. கடற்கொள்ளையர்களாலும் பொருட்கள் களவாடப்படுகிறது. 2014ல் தேர்தலில் ஆட்சிக்கு வந்தால் மீனவர்களின் நலன் காக்கப்படும் என பிரதமர் கூறியிருந்தார். இலங்கையுடன் நல்ல நட்பில் இருக்கக்கூடிய சூழ்நிலையில் தமிழக மீனவர்களின் பாதுகாப்புக்கான உத்திரவாதத்தை ஒன்றிய அரசு ஏற்படுத்த வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.



# நரிக்குடி ஒன்றிய சேர்மனாக தி.மு.க. கவுன்சிலர் போட்டியின்றி தேர்வு

திருச்சுழி, ஆக. 24

நரிக்குடி ஒன்றிய சேர்மனாக தி.மு.க. கவுன்சிலர் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டார். அவருக்கு பல்வேறு தரப்பினர் வாழ்த்து தெரிவித்தனர்.

விருதுநகர் மாவட்டம் நரிக்குடி ஒன்றியத்தில் மொத்தம் 14 கவுன்சிலர்கள் உள்ளனர். இதில் 6 அ.தி. மு.க. உறுப்பினர்களும், 6 தி.மு.க. உறுப்பினர்களும், அ.ம.மு.க., சுயேட்சை தலா ஒரு உறுப்பினர்களும் உள்ள னர். இந்த நிலையில் கடந்த மார்ச் மாதம் அருப்புக்கோட்டை கோட்டாட்சியர் கல்யாணகுமார் தலைமையில் நடைபெற்ற கவுன்சிலர்கள் கூட்டத்தில் நரிக்குடி ஒன்றிய சேர்மன் பஞ்ச வர்ணம் மீது நம்பிக்கை யில்லா தீர்மானம் கொண்டு வரப்பட்டது. மொத்தமுள்ள 14 கவுன்சிலர்களில் அ.தி. மு.க. மற்றும் தி.மு.க. கவுன்சி லர்கள் உள்பட 12 கவுன்சி லர்கள் பஞ்சவர்ணத்துக்கு எதிராக கையெழுத் திட்டனர். இதுகுறித்து நரிக்குடி ஒன்றிய சேர்மன் பஞ்சவர்ணத்தை பதவி நீக்கம் செய்து உத்தரவிட்டார். இந்த உத்தரவு தமிழக அரசி தழிலும் வெளியிடப்பட்டது. இதனையடுத்து நரிக்குடி ஒன்றிய சேர்மன் பதவி காலியாக அறிவிக்கப்பட்ட நிலையில் நிர்வாக நலன் கருதி நரிக்குடி ஒன்றிய துணை சேர்மனாக இருந்த அம்மன் பட்டி ரவிச்சந்திரனை நரிக்குடி ஒன்றிய சேர்மனாக (பொறுப்பு) செயல்பட மாவட்ட கலெக்டர் ஜெய சீலன் உத்தரவு பிறப்பித்தார். இன்று (23ந் தேதி) நரிக்குடி ஒன்றிய சேர்மனை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நடைபெறுமென தேர்தல் ஆணையம் அறிவித்தது. அதன்படி தேர்தலுக்கான



ஏற்பாடுகள் நரிக்குடி ஒன்றிய அலுவலகத்தில் செய்யப்பட்டிருந்தது. காலை 10.30 மணிக்கு தி.மு.க.வை சேர்ந்த 6 கவுன்சிலர்களும், அ.தி. மு.க.வை சேர்ந்த 4 கவுன் சிலர்களும், ஒருசுயேட்சை கவுன்சிலர்களும் வந்தனர். அதனை தொடர்ந்து தேர்தல் நடந்தது. அப்போது நரிக்குடி ஒன்றிய 3வது வார்டு கவுன்சிலர் காளீஸ்வரி சமயவேலு போட்டி யிடுவதாக அறிவித்தார்.

இதற்கு தி.மு.க., அ. தி.மு.க. உள்ளிட்ட 11 கவுன்சி லர்களும் ஆதரவு தெரிவித்தனர். இதையடுத்து காளீஸ்வரி சமயவேலு நரிக்குடி ஒன்றிய சேர்மனாக போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டார். அவருக்கு பல்வேறு தரப்பினர் வாழ்த்து தெரிவித்தனர்.

# திண்டுக்கல்லில் வரத்து குறைவால் வாழைப்பழம் விலை உயர்வு

குள்ளனம்பட்டி, ஆக. 24

திண்டுக்கல் அருகே நத்தம், ஆத்தூர், தர்மத்துப்பட்டி, சுரைக்காய்பட்டி, மல்லையாபுரம், கன்னிவாடி, எரியோடு குஜிலியம்பாறை மற்றும் கரூர், குளித்தலை, தேனி, சின்னமனூர் ஆகிய பகுதிகளில் ஆண்டு முழுவதும் வாழை சாகுபடி செய்யப்படுகிறது. இந்த ஆண்டு வாழைத்தார் விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. சுபமுகூர்த்தம் மற்றும் விழாக்காலங்களில் தேவை அதிகமாக இருப்பதால் வாழைப்பழதார்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. இதுகுறித்து வாழைப்பழ வியாபாரிகள் சங்கச் செயலாளர் பாண்டி கூறியதாவது: வாழைத்தார் வரத்து குறைவானதால் வாழைப்பழங்களின் விலை உயர்ந்துள்ளது. ரூ.300க்கு விற்ற பச்சை வாழைப்பழத்தார் ரூ. 600க்கும், ரூ.300 க்கு விற்ற கற்பூரவள்ளி ரூ.500க்கும், ரூ. 250 க்கு விற்ற நாட்டுப்பழம் ரூ. 450க்கும், ரூ.600 க்கு விற்ற செவ்வாழை ரூ.1100 க்கும், ரூ.400 க்கு விற்றரஸ்தாலிரூ.700க்கும் விற்கப்படுகிறது. சில்லரை விலையில் செவ்வாழை ரூ.12க்கும், பச்சைப்பழம் ரூ.5க்கும், கற்பூரவல்லி, பூவன் ரூ.6 க்கும், ரஸ்தாலி ரூ. 7க்கும், நாட்டுப்பழம் ரூ.5 க்கும் விற்பனை செய்யப்படுகிறது. தினசரி தேவையை விட வாழைத்தார்களின் வரத்து குறைவாகவே உள்ளது. அதிக விலை கொடுத்து வாங்குவதால் நாங்களும் கூடுதல் விலைக்கு விற்பனை செய்கிறோம் என்றார்.



# சமூக வலைதள பயன்பாடு குறித்த விழிப்புணர்வு

சீர்காழி, ஆக. 24

சீர்காழியில் பள்ளி மாணவ மாணவிகளுக்கான சமூக வலைதள பயன்பாடு குறித்த விழிப்புணர்வு நிகழ்வு நடைபெற்றது. மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி சபாநாயக முதலியார் இந்து மேல்நிலைப்பள்ளியில்மாணவ மாணவிகளுக்கு போதை மற்றும் சமூக வலைதள பயன்பாடு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. பள்ளி தலைமை ஆசிரியர் எஸ். அறிவுடைநம்பி தலைமை வகித்தார். உதவிதலைமை ஆசிரியர்கள் துளசிரெங்கன், சீனிவாசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். உடற்கல்வி இயக்குனர் முரளிதரன் வரவேற்றார். இந்நிகழ்ச்சியில் மயிலாடுதுறை மாவட்ட சமூக நீதி மற்றும் மனித உரிமை துணைக் கண்காணிப்பாளர் கலை கதிரவன் கலந்து கொண்டு மாணவர்களுக்கு கருத்துக்களை வழங்கினார் சிறுவயதிலேயே போதைக்கு அடிமையாகும் இளைஞர்களின் நிலை குறித்து பல்வேறு கருத்துகளை எடுத்துரைத்தார்.



மேலும் மாணவிகள் சமூக வலைதளங்களை எவ்வாறு பாதுகாப்பாக கையாள வேண்டும் என்பது குறித்தும் விளக்கம் அளித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

பள்ளி மாணவர்களிடையே எவ்வித பாகுபாடும் இன்றி அனைவரும் சகோதரர்களாய் பழக வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

# கோடமலை, ஒசட்டி பகுதியில் சாலை மேம்பாட்டு பணிகள்

ஊட்டி, ஆக. 24

ஊட்டி, நீலகிரி மாவட்டம், குன்னூர் ஒன்றியம், கோடமலைஒசட்டி பகுதியில் முதலமைச்சர் ஊரக சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.58 லட்சம் மதிப்பீட்டில் சாலை மேம்பாட்டு பணிகள் நடந்தன. இதனை சுற்றுலாதுறை அமைச்சர் ராமசந்திரன் துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் ஜெ.பிரேம்குமார், குன்னூர் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் சுனிதா நேரு, பர்லியார் ஊராட்சி தலைவர் சுசிலா, துணைதலைவர் தீனதயாளன், ஒன்றிய குழு உறுப்பினர் மகாலிங்கம், பொதுக்குழு உறுப்பினர் கா.செல்வம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.






## மாஸ் ஃபேண்டசி என்டர்டெயினராக உருவாகும் மெகா 157.. சிரஞ்சீவியின் புதிய படம் அறிவிப்பு..!

சிரஞ்சீவி பிறந்தநாளில் அவரது அடுத்த படத்தின் அறிவிப்பு வெளியாகி இருக்கிறது. மெகா 157 படத்தினை யு.வி. கிரியேஷன்ஸ் நிறுவனம் தயாரிக்கிறது.

தென்னிந்திய சினிமாவின் முன்னணி நடிகர் சிரஞ்சீவி இன்று தனது பிறந்தநாளை கொண்டாடுகிறார். இதையொட்டி, பிறந்தநாள் கொண்டாட்டத்தின் அங்கமாக சிரஞ்சீவி நடிக்கும் அடுத்த படம் குறித்த அறிவிப்பு வெளியாகி இருக்கிறது. தற்போதைக்கு "மெகா 157" என்று தலைப்பிடப்பட்டு இருக்கும் இந்த படத்தை இயக்குனர் வசிஸ்தா இயக்குகிறார். இந்த படம் ஃபேன்டசி பொழுதுபோக்கு கதையம்சம் கொண்டிருக்கும் என்று தகவல்கள் வெளியாகி வருகின்றன.

சிரஞ்சீவி பிறந்தநாளில் அவரது அடுத்த படத்தின் அறிவிப்பு வெளியாகி இருப்பது அவரின் ரசிகர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தி இருக்கிறது.

"மெகா 157" படத்தை யு.வி. கிரியேஷன்ஸ் நிறுவனம் தயாரிக்கிறது. இந்த நிலையில், பட அறிவிப்பிலேயே சிரஞ்சீவிக்கு பிறந்தநாள் வாழ்த்துக்களும் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.

இது குறித்த எக்ஸ் (முன்பு டுவிட்டர்) பதிவில் "இந்த முறை, இது பிரபஞ்சத்தை மிஞ்சும் வகையில் மெகா மாஸ்ஆக இருக்கும். ஐந்து சக்திகள் ஒன்றிணைந்து மெகாஸ்டார் ஆகிறது," என்று குறிப்பிட்டு இருக்கிறது.

இத்துடன் வெளியிடப்பட்டு இருக்கும் போஸ்டரில் ஐந்து சக்திகள் நிலம், நீர், நெருப்பு, காற்று மற்றும் வானம் உள்ளிட்டவை ஆகும். இவை ஐந்தும் நட்சத்திர வடிவில் ஒன்றிணைந்துள்ளன. "மெகா 157" பட அறிவிப்பு வெளியாகி இருப்பதை ஒட்டி, இந்த படத்தின் மீதான எதிர்பார்ப்பு ஏற்கனவே அதிகரிக்க துவங்கிவிட்டது. இந்த படம் பற்றிய இதர விவரங்கள் வரும் வாரங்களில் வெளியாகும் என்று தெரிகிறது.

## எதிர்பார்ப்பை எகிற செய்திருக்கும் மை3 சீரிஸ்.. ஃபர்ஸ்ட் லுக் வெளியானது!




மை3 சீரிசைஒருகல்ஒருகண்ணாடி படத்தை இயக்கை ராஜேஷ் எம் இயக்கி இருக்கிறார். மை 3 சீரிசில் ஹன்சிகா மோத்வானி, முகேன் ராவ், ஷாந்தனு மற்றும் பலர் நடித்துள்ளனர்.

இந்தியாவின் முன்னணி ஓ.டி.டி. தளமான டிஸ்னி பிளஸ் ஹாட்ஸ்டார், ஹாட்ஸ்டார் ஸ்பெஷல்ஸ் பிரிவில் உருவாக்கி இருக்கும் "மைம3" என்ற சீரிஸ் மீது அதிக எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. இந்நிலையில், இதன் பர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியிட ப்பட்டுள்ளது.

ஹன்சிகா மோத்வானி, முகேன் ராவ், ஷாந்தனு, ஜனனி ஐயர், அஷ்னா ஜவேரி உள்ளிட்டோர் இந்த சீரிசில் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். 'பாஸ் என்கிற பாஸ்கரன்' மற்றும் 'ஒரு கல் ஒரு கண்ணாடி' போன்ற காமெடி பிளாக்பஸ்டர் படங்களை இயக்கிய, பிரபல இயக்குநர் ராஜேஷ் எம் இந்த சீரிசை இயக்கி உள்ளார். ரொமான்டிக் காமெடி ஜானரில், ரோபோவின் காதலை நகைச்சுவையுடன் சொல்லும் சீரிசாக மை 3 உருவாகியுள்ளது. இந்த சீரிசுக்கு கார்த்திக் முத்துக்குமார் ஒளிப்பதிவு செய்துள்ளார், இசையமைப்பாளர் கணேசன், அஷிஷ்எடிட்டிங்பணிகளைசெய்துள்ளார். ஹாட்ஸ்டார்ஸ்பெஷல்ஸ்இல்வெளியாக இருக்கும் "மைம3" சீரிசை Trendloud நிறுவனம் தயாரித்து உள்ளது.

## ரூ.56 கோடி கடன் விவகாரம்: சன்னிதியோலுக்கு அனுப்பிய ஏல அறிவிப்பை வாபஸ் பெற்ற பரோடா வங்கி

இந்தி நடிகர் சன்னி தியோல் நடித்து சமீபத்தில் வெளிவந்த கதார் 2 திரைப்படம் 'ஹிட்' ஆகி வசூலை குவித்து வருகிறது. இந்நிலையில் சன்னிதியோலுக்கு சொந்தமாக மும்பை ஜூகு காந்தி கிராம் சாலையில் உள்ள பங்களாவை அவர் திரைப்படங்களின் போஸ்ட் புரொடக்ஷன் ஸ்டூடியோவாக பயன்படுத்தி வந்தார். அந்த பங்களாவுக்காக அவர் பேங்க் ஆப் பரோடா வங்கியில் கடன் வாங்கி இருந்தார். அந்த பணத்தை சன்னி தியோல் முறையாக கட்டவில்லை என கூறப்படுகிறது.

இதனால் அவருக்கு ரூ.56 கோடிக்கு மேல் செலுத்தப்படாமல் நிலுவை தொகை இருந்துள்ளது. இதைத்தொடர்ந்து நிலுவை தொகையை மீட்பதற்காக சன்னி தியோலுக்குசொந்தமானபங்களாவையைஏலம்விடவங்கிநிர்வாகம்முடிவுசெய்துள்ளது. அதன்படி அவரது பங்களா வருகிற 25ந்தேதி ஆன்லைன் மூலம் ஏலம் விடப்படும் என வங்கி தரப்பில் பங்களாவில் நோட்டீஸ் ஒட்டப்பட்டு உள்ளது. சன்னி தியோலின் உண்மையான பெயர் அஜய்சிங் ஆகும்.

அஜய்சிங் பெயரில் தான் பங்களாவும் இருக்கிறது. எனவே அந்த பெயரில் ஏலம் அறிவிப்பு வெளியானது. இந்நிலையில் திடீரென ஏல அறிவிப்பு வாபஸ் பெறப்பட்டுள்ளதாக பேங்க் ஆப் பரடோ வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## டீசரோடு புதிய படத்தின் தலைப்பை அறிவித்த இயக்குநர் பண்டி சரோஜ்குமார்



2010 ஆம் ஆண்டு வெளியான 'போர்க்களம்' திரைப்படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமானவர் பண்டி சரோஜ்குமார். மிரட்டலான மேக்கிங் மூலம் முதல் படத்திலேயே ஒட்டு மொத்த கோலிவுட்டின் கவனத்தை ஈர்த்ததோடு, பத்திரிகையாளர்களால் பெரிதும் பாராட்டப்பட்டார். இதற்கிடையே, இயக்குநர் பண்டி சரோஜ்குமாரின் அடுத்த படத்திற்காக ரசிகர்கள் காத்திருந்த நிலையில், கடந்த ஆண்டு "கலை எனது, விலை உனது" என்ற கருத்தோடு டிஜிட்டல் பிளாட்பார்மில் வெளியான 'மாங்கல்யம்' என்ற திரைப்படத்தை இயக்கியதோடு, அப்படத்தின் மூலம் நடிகராகவும் அறிமுகமாகி ரசிகர்களிடம் வரவேற்பு பெற்றார். இயக்குநராக ஏற்கனவே பாராட்டு பெற்ற பண்டி சரோஜ்குமார், தற்போது நடிகராகவும் ரசிகர்களிடம் தனக்கு கிடைத்த வரவேற்பை தொடர்ந்து, புதிய படம் ஒன்றை இயக்கி தயாரிப்பதோடு, அதில் நாயகனாகவும் நடிக்கிறார். 'பி.எஸ்.கே மெயின்ஸ்ட்ரீம்' (BSK MAINSTREAM) என்ற நிறுவனம் சார்பில் பண்டி சரோஜ்குமார் தயாரித்து, இயக்கி நடிக்க இருக்கும் படத்திற்கு 'பராக்ரமம்' என்று தலைப்பு வைக்கப்பட்டுள்ளது. "I ME MYSELF" என்ற டேக்லைன் கொண்ட 'பராக்ரமம்' படத்தின் தலைப்பை அசத்தலான டீசர் மூலம் பண்டி சரோஜ்குமார் அறிவித்துள்ளார். இந்த படத்தை நான் இயக்கி, தயாரித்து, நாயகனாக நடிப்பதோடு, இசை மற்றும் படத்தொகுப்பு பணிகளையும் நானே செய்யப் போகிறேன். மேலும், என்னுடன் பல திறமையான புதுமுக நடிகர், நடிகைகள் இப்படத்தின்மூலம்வெள்ளித்திரையில்அறிமுகமாகிறார்கள்எனபண்டிசரோஜ்குமார் கூறினார். பண்டி சரோஜ்குமார் நாயகனாக நடிக்கும் இப்படத்தில் அனாமிகா, கிரிட்டி, மோகன் சேனாபதி உள்ளிட்ட பலர் முக்கிய வேடங்களில் நடிக்கிறார்கள். 'பி.எஸ்.கே மெயின்ஸ்ட்ரீம்' நிறுவனம் சார்பில் தயாரித்து இயக்கி நடிப்பதோடு, இசை, படத்தொகுப்பு ஆகிய பணிகளையும் பண்டி சரோஜ்குமாரே கவனிக்கிறார். தற்போது படத்தின்ப்ரீபுரொடக்ஷன்ஸ் பணிகளில் ஈடுபட்டுள்ள இயக்குநர்பண்டி சரோஜ்குமார், செப்டம்பர் மாதம் படப்பிடிப்பை தொடங்கி, அக்டோபர் மாதத்திற்குள் இரண்டு கட்டங்களாக 30 நாட்களில் முழு படப்பிடிப்பையும் முடித்து, 2024 ஆம் ஆண்டு பிப்ரவரி 14 ஆம் தேதி படத்தை திரையரங்குகளில் வெளியிட திட்டமிட்டுள்ளார்.

## நடிகர் விஷ்ணு மஞ்சுவின் கனவு திரைப்படம் பூஜையுடன் தொடங்கியது



தெலுங்கு சினிமாவின் முன்னணி நடிகர் விஷ்ணு மஞ்சுவின் நீண்டநாள் கனவான 'கண்ணப்பா ஒரு உண்மையான இந்திய காவியக் கதை' திரைப்படம் இன்று ஸ்ரீ காளஹஸ்திரி கோவிலில் பூஜையுடன் தொடங்கியது. சிவபெருமானின் அசைக்க முடியாத பக்தரான கண்ணப்பாவின் காலத்தால் அழியாத சரித்திரம் மற்றும் பக்தியை பிரமாண்டமான திரைக்காவியமாக மக்களுக்கு கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்ட நடிகர் விஷ்ணு மஞ்சு, இதற்காக கடந்த இரண்டு வருடங்களாக பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொண்டார். கண்ணப்பாவின் வாழ்க்கை மற்றும் அவருடைய பக்தியின் மகிமை குறித்து பல ஆச்சரியமான மற்றும் அதிசய தகவல்களை சேகரித்தவர், அவற்றைக் கொண்டு பிரமாண்டமான பான் இந்திய திரைப்படத்தை கொடுப்பதற்கான வேலையை தொடங்கியுள்ளார். 24 ஃபிரேம்ஸ் ஃபேக்டரி மற்றும் ஏவிஏ என்டர்டெயின்மெண்ட் சார்பில் டாக்டர்.மோகன் பாபு தயாரிப்பில் மிகப்பெரிய பொருட் செலவில் பிரமாண்டமான காவியமாக உருவாக இருக்கும் இப்படத்தில் கண்ணப்பா வேடத்தில் விஷ்ணு மஞ்சு நடிக்கிறார். கதையின் நாயகியாக நுபுர்சனோன் நடிக்கிறார். இவர்களுடன் பல முன்னணி நட்சத்திரங்கள் முக்கியமான வேடங்களில் நடிக்கிறார்கள். பிரபல எழுத்தாளர்கள் பருச்சுரிகோபாலகிருஷ்ணா, தோட்டா பிரசாத், தோட்டப்பள்ளி சாய்நாத், புர்ரா சாய் மாதவ் ஆகியோர் இப்படத்தின் கதையை எழுதியுள்ளனர். மணிசர்மா மற்றும் ஸ்டீபன் தேவஸ்ஸே இசையமைக்கின்றனர். ஷெல்டன் ஷா ஒளிப்பதிவு செய்ய, சின்னா கலை இயக்குநராக பணியாற்றுகிறார். 'மஹாபாரதம்' தொடரை இயக்கிய முகேஷ் சிங் 'கண்ணப்பா ஒரு உண்மையான இந்திய காவியக் கதை' திரைப்படத்தை இயக்குகிறார். இந்திய சினிமாவின் முன்னணி தொழில்நுட்ப கலைஞர்கள் மட்டும் இன்றி ஹாலிவுட் சினிமாவின் முன்னணி தொழில்நுட்ப கலைஞர்களும் பணியாற்றும் இப்படம் இந்திய சினிமாவின் மிக முக்கியமான திரைப்படங்களில் ஒன்றாக மட்டும் இன்றி உலக மக்களையும் கவரும் வகையில் பிரமாண்டமான படைப்பாக உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.




## உலக கோப்பைக்கு நியூசிலாந்து போட்ட ஸ்கெட்ச் பயிற்சியாளர் குழுவில் ஸ்டீபன் பிளெமிங்

உலக கோப்பை கிரிக்கெட் போட்டி அக்டோபர் 5ந்தேதி முதல் நவம்பர் 19ந்தேதி வரை இந்தியாவில் உள்ள 10 நகரங்களில் நடக்கிறது. இதில் போட்டியை நடத்தும் இந்தியா, நடப்பு சாம்பியன் இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, பாகிஸ்தான், நியூசிலாந்து, தென்ஆப்பிரிக்கா, வங்காளதேசம், ஆப்கானிஸ்தான், இலங்கை, நெதர்லாந்து ஆகிய 10 அணிகள் பங்கேகின்றன. இந்நிலையில் நியூசிலாந்து அணியின் பயிற்சியாளர் குழுவின் ஒரு பகுதியாக முன்னாள் கேப்டன் ஸ்டீபன் பிளெமிங் மற்றும் இயன் பெல் மற்றும் ஜேம்ஸ் ஃபாஸ்டர் ஆகியோர் பயிற்சியாளர் குழுவில் இணைந்துள்ளனர். இந்தமாதம் ஆகஸ்டு மாதம் 30ந்தேதி நியூசிலாந்து அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு டி20 மற்றும் ஒருநாள் தொடரில் விளையாட உள்ளது. இந்த தொடரில் நியூசிலாந்து அணியுடன் இந்த குழு இணைந்து செயல்படுவர். பிளெமிங் அணியில் இணைவது வீரர்களுக்கு மிகப்பெரிய உதவியாக இருக்கும். மேலும் ஊழியர்களுக்கும் நல்லது என நியூசிலாந்து அணியின் தலைமை பயிற்சியாளர் தெரிவித்துள்ளார். நடந்து முடிந்த ஐபிஎல் தொடரில் சாம்பியன் பட்டம் வென்ற சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் தலைமை பயிற்சியாளராக பிளெமிங் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் பெண் குழந்தை: ஆதிரா என பெயர் சூட்டி மகிழ்ந்த சேரீனா வில்லியம்ஸ்

டென்னிஸ் உலகின் முன்னாள் நம்பர் 1 நட்சத்திர வீராங்கனையான அமெரிக்காவை சேர்ந்த செரீனா வில்லியம்ஸ் கடந்த ஆண்டு டென்னிசிலிருந்து ஓய்வு அறிவித்தார். இவருக்கு ஏற்கெனவே 4 வயதில் ஒரு மகள் உள்ளார். இந்நிலையில் அவருக்கு இரண்டாவதாக மீண்டும் ஒரு பெண் குழந்தை பிறந்துள்ளது. இதனை அவருடைய கணவர் அலெக்சிஸ் ஓஹானியன் சமூக வலைதளங்களில் அறிவித்தார். மேலும் செரீனாவும் குழந்தைகள் மற்றும் கணவருடன் இருக்கும் புகைபடத்தை அவரது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். முதல் பெண் குழந்தைக்கு அலெக்சிஸ் ஒலிம்பியா ஓஹானியன் ஜூனியர் என பெயரிட்டிருந்தனர். இரண்டாவது பெண் குழந்தைக்கு ஆதிரா ரிவர் ஓஹானியன் என பெயரிட்டுள்ளனர்.




## 10 அணிகள் பங்கேற்கும் அகில இந்திய ஹாக்கி போட்டி: சென்னையில் இன்று தொடக்கம்

எம்.சி.சி. முருகப்பா தங்கக் கோப்பைக்கான 94வது அகில இந்திய ஹாக்கி போட்டி சென்னைஎழும்பூரில்உள்ளமேயர்ராதாகிருஷ்ணன்ஸ்டேடியத்தில்இன்றுதொடங்குகிறது. அடுத்த மாதம் 3ந்தேதி வரை நடக்கும் இந்த போட்டியில் மொத்தம் 10 அணிகள் பங்கேற்கின்றன. அவை இரு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. 'ஏ' பிரிவில் நடப்பு சாம்பியன் இந்தியன்ஆயில்கார்ப்பரேசன், இந்தியகடற்படை, இந்தியரெயில்வே, ஹாக்கிகர்நாடகா, மத்திய தலைமை செயலகம், 'பி' பிரிவில் பஞ்சாப் நேஷனல் வங்கி, இந்திய ராணுவம், இந்திய விமானப்படை, தமிழ்நாடு ஹாக்கி யூனிட், இந்திய தணிக்கை துறை அலுவலகம் ஆகிய அணிகள் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு அணியும் தங்கள் பிரிவில் உள்ள மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் இரு பிரிவிலும் டாப் 2 இடங்களை பிடிக்கும் அணிகள் அரைஇறுதிக்கு தகுதி பெறும். தொடக்க நாளில் இரு ஆட்டங்கள் நடக்கின்றன. தமிழ்நாடுதணிக்கை துறை அலுவலகம் (மாலை 4.15 மணி), இந்திய ரெயில்வே மத்திய தலைமை செயலகம் (மாலை 6 மணி) அணிகள் மோதுகின்றன. 4 ஆண்டுக்கு பிறகு நடக்க உள்ள இந்த போட்டியில் சாம்பியன் கோப்பையை வெல்லும் அணி ரூ.7 லட்சமும், 2வது இடத்தை பிடிக்கும் அணி ரூ.5 லட்சமும் பரிசுத்தொகையாக பெறும். அரைஇறுதியில் தோற்கும் அணிகளுக்கு தலா ரூ.50 ஆயிரம் கிடைக்கும் இது தவிர சிறந்த வீரர், சிறந்த முன்கள வீரர், சிறந்த கோல் கீப்பர் மற்றும் பின்கள வீரர், இறுதிப்போட்டியில் ஆட்டநாயகன் விருது வெல்பவர், தொடர்நாயகன் ஆகியோருக்கு உயர்ரக சைக்கிளுடன், தலா ரூ.10 ஆயிரம் ரொக்கப்பரிசும் வழங்கப்படும். இந்த தகவலை சென்னையில் நேற்று எம்.சி.சி. தலைவர் விஜய்குமார், முருகப்பா குழும நிர்வாகி அருண் முருகப்பன் ஆகியோர் நிருபர்களிடம் தெரிவித்தனர். அவர்கள் மேலும் கூறுகையில், 'கொரோனா பெருந்தோற்று காரணமாக 4 ஆண்டு இடைவெளிக்கு பிறகு மீண்டும் இந்த போட்டியை நடத்துவதில் மகிழ்ச்சி அடைகிறோம். நாட்டில் உள்ள முன்னணி அணிகளின் அற்புதமான ஆட்டத்தை நாங்கள் ஆவலுடன் எதிர்நோக்கி உள்ளோம். இந்த ஆண்டு பரிசுத்தொகை கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது. சென்னையில் சமீபத்தில் நடந்து முடிந்த ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை ஹாக்கி போட்டிகள் பெரிய அளவில் கவனத்தை ஈர்த்தன. ஹாக்கி போன்ற விளையாட்டுகளை ஊக்குவிப்பதில் தமிழக அரசு கவனம் செலுத்துவது பாராட்டுக்குரியது. இந்த போட்டியை பார்க்க அதிக அளவில் ரசிகர்கள் வருவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்' என்று கூறினர்.

## உலக தடகள சாம்பியன்ஷிப் 100 மீட்டர் ஓட்டத்தில் அமெரிக்க வீராங்கனை முதலிடம்

19வது உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டி ஹங்கேரி தலைநகர் புடாபெஸ்டில் நடந்து வருகிறது. இதில் உலகின் அதிவேக பெண்மணி யார்? என்பதை தீர்மானிக்கும் 100 மீட்டர் ஓட்டப்பந்தயம் 3வது நாளான நேற்று முன்தினம் இரவு அரங்கேறியது. இறுதிப்போட்டியில் 9 வீராங்கனைகள் மின்னல் வேகத்தில் சீறிப்பாய்ந்தனர். இதில் கடைசி ஓடுபாதையில் இருந்து ஓட தொடங்கிய அமெரிக்க வீராங்கனை ஷாகாரி ரிச்சர்ட்சன் முதலில் சற்று பின்தங்கி இருந்தாலும் கடைசி கட்டத்தில் அபாரமாக செயல்பட்டு அனைவரையும் பின்னுக்கு தள்ளி 10.65 வினாடியில் பந்தய தூரத்தை கடந்து புதிய போட்டி சாதனையுடன் தங்கப்பதக்கத்தை சொந்தமாக்கினார். கடந்த ஆண்டு நடந்த உலக போட்டியில் 2வது இடம் பிடித்த ஜமைக்கா வீராங்கனை ஷெரிகா ஜாக்சன் (10.72 வினாடி) மீண்டும் வெள்ளிப்பதக்கம் பெற்றார். நடப்பு சாம்பியனும், 5 முறை தங்கப்பதக்கம் வென்று ஆதிக்கம் செலுத்தியவருமான மற்றொரு ஜமைக்கா வீராங்கனை 36 வயது ஷெல்லி ஆன் பிரேசர்பிரைஸ் 10.77 வினாடியில் இலக்கை எட்டி வெண்கலப்பதக்கத்தை தனதாக்கினார். 23 வயதான ஷாகாரி ரிச்சர்ட்சன் தனது முதல் உலக சாம்பியன்ஷிப் போட்டியிலேயே தங்கப்பதக்கத்தை உச்சி முகர்ந்துள்ளார். 2021ம் ஆண்டு டோக்கியோவில் நடந்த ஒலிம்பிக் போட்டிக்கான அமெரிக்க தகுதி சுற்றில் வெற்றி கண்ட ஷாகாரி ரிச்சர்ட்சன் போதைப்பொருள் பயன்படுத்தியது கண்டறியப்பட்டதால் ஒரு மாதம் தடையுடன் அந்த ஒலிம்பிக்கையும் தவறவிட வேண்டியதானது. அத்துடன் அவர் கடந்த ஆண்டு (2022) நடந்த உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டிக்கு தகுதி பெறவில்லை. நடப்பு உலக தடகள சாம்பியன்ஷிப்பில் 100 மீட்டர் ஓட்டத்தில் அமெரிக்க வீரர் நோவா லைல்ஸ் ஏற்கனவே வாகை சூடியிருந்தார். பெண்கள் பிரிவில் ஷாகாரி ரிச்சர்ட்சன் வெற்றியின் மூலம் உலக தடகள சாம்பியன்ஷிப் 100 மீட்டர் ஓட்டத்தில் இரு பிரிவிலும் அமெரிக்கா 2017ம் ஆண்டுக்கு பிறகு முழுமையாக கோலோச்சியுள்ளது. ஷாகாரி ரிச்சர்ட்சன் கூறுகையில், 'எனது முதலாவது பெரிய சர்வதேச போட்டியிலேயே தங்கப்பதக்கம் வென்று இருப்பதால் இதனை நிச்சயமாக ஒரு நல்ல தொடக்கம் என்றே சொல்வேன். இதில் எனது சிறந்த திறன் வெளிப்பட்டது. நான் முன்பை விட நல்ல நிலையை எட்டி இருக்கிறேன். இன்னும் சிறப்பாக செயல்பட முயற்சி செய்வேன்' என்றார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.